# ஞானஸ்நானம் பெறுத் தயக்கம்



வயலெட்டா

மே 04
வாரம் 5

உஸ்பெகிஸ்தான்

1



- உஸ்பெகிஸ்தானின் தலைநகரான டஸ்கென்டில் நடைபெற்ற சுவிசேஷக் கூட்டங்களின்போது, பிரசங்கம் செய்தவர் அர்ப்பணிப்பு அழைப்பு கொடுத்த சமயத்தில், தான் இன்னும் ஞானஸ்நானத்திற்கு தயாராகவில்லை என்று **வயலெட்டா** நினைத்தாள்.
- அவளுக்கு போதுமான வேத அறிவு இல்லை. ஆனால் வாழ்க்கை முழுவதையும் தேவனிடம் அர்ப்பணிக்குமாறு பிரசங்கியார் கொடுத்த அழைப்பு பெரிதாகத் தெரிந்தது.
- ‘என்னால் முடியாது! அதில் எனக்கு விருப்பமும் இல்லை’ என்று வயலெடா சொல்லிக்கொண்டாள்.



- சில காலமாகத்தான் தம் அம்மாவுடன் சேர்ந்து அட்வென்டிஸ்ட் சபைக்குச் செல்ல ஆரம்பித்திருந்தாள்.
- அந்தச் சமயத்தில்தான் ரஷ்ய வேதாகமக் கல்லூரி இயங்குகிற அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத்தின் தலைவர் சாவோவ்ஸ்கி சுவிசேஷக் கூட்டங்கள் நடத்துவதற்காக டஸ்கன்டிற்கு வந்திருந்தார்.
- ஞானஸ்நானம் பெற முன்வருமாறு கூட்டத்தினரை அவர் அழைத்தபோது, வயலெடாவின் அம்மாதான் முதன்முதலாக முன்பாகச் சென்றார். பிறகு சபைப்போதகருடைய 14 வயது மகன் முன்பாகச் சென்றான்.

3



- அதன் பிறகு, மூன்றாவது ஒரு நபர் சென்றார். ஆனால் வயலெடா அசையவில்லை. ‘இந்த முறை ஞானஸ்நானம் பெற வேண்டாம் என்று நினைத்தாள்.
- அடுத்த நாள் இரவில், பிரசங்கியார் மீண்டும் அந்த அழைப்பைக் கொடுத்தார். சபையைச் சேர்ந்த தோழி ஒருவர் தன்னை ஊக்கப்படுத்தியது வயலெடாவுக்கு ஞாபகம் வந்தது. “வேதப் பாடங்களை முடித்துவிட்டதால், நீ ஞானஸ்நானம் பெறலாம்” என்று சொல்லியிருந்தார்.
- ஆனாலும் தான் ஆயத்தமானதாக அவர் உணரவில்லை. தனக்கு போதுமான அளவுக்கு வேத அறிவு இல்லையென நினைத்தார்.




- பிரசங்கியார் அழைத்த சமயத்தில் அவர் நேரடியாக வயலெட்டாவைப் பார்த்தார். இல்லை என்பதுபோல உறுதியாக தலையசைத்தார்.
- கூட்டங்களின் கடைசி நாள் இரவில், பிரசங்கியார் இறுதியாக ஒரு அழைப்பு கொடுத்தார்.
- “யார் உங்களை ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்க விரும்புகிறீர்கள்?” என்று கேட்டார். வயலெட்டாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அட்வென்டிஸ்ட் சபை வேதாகம சத்தியத்தை மட்டுமே அறிவிப்பதை உணர்ந்திருந்தார். ஆனாலும் தான் ஆயத்த மானதாக அவர் உணரவில்லை.



- முந்தின இரவுகளில் முன் வந்தவர்களை மீண்டும் முன்பாக வரும்படி அழைத்தார். வயலெட்டாவின் அம்மா உட்பட பத்துக்கும் மேற்பட்டோர் முன்பாகச் சென்றார்கள். பிரசங்கியார் அவர்களை வரவேற்றார். ஆனால் அவர் விடுவதாக இல்லை. மீண்டும் ஒருமுறை அழைப்புக் கொடுத்தார்.


- “உங்களில் வேறு யாராவது இருக்கலாம். நீங்கள் முன்பாக வர விரும்புகிறீர்களா?” என்று கேட்டார். மீண்டும் மீண்டும் அழைத்தார். அவர் அழைத்த ஒவ்வொரு முறையும், நேரடியாக தன்னையே அழைப்பதாக வயலெட்டா உணர்ந்தார். ‘நான் மேடைக்குச் செல்லலாமா? என்று யோசித்தார்.



- பதிலுக்கு யோசிப்பதற்குள்ளாக, எழுந்து மேடைக்குச் சென்றுவிட்டார். “அவ்வளவுதான். அந்த நபருக்காதத்தான் நாம் காத்துக் கொண்டிருந்தோம்” என்று போதகர் சொன்னார்.
- ஆனால் கடைசியாகச் சென்றது வயலெட்டா மட்டுமல்ல; வயலெட்டாவுடன் சேர்ந்து 60 வயது நபர் ஒருவரும் சென்றார். இருவரும் சேர்ந்து வேதப்பாட வகுப்புகளில் கலந்து கொண்டவர்கள் தாம். “எனக்கு பயமாக இருந்தது. ஆனாலும் நீங்கள் எழுந்து முன்பாகச் சென்றதைப் பார்த்ததும் எனக்கும் செல்லுவதற்கான தைரியம் வந்தது” என்று சொன்னார்.



- வயலெட்டாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. தன்னுடைய உள்ளான போராட்டமும் இறுதி முடிவும் இன்னொருவரில் தாக்கம் ஏற்படுத்தவிருந்ததை வயலெட்டா யோசித்துப் பார்க்கவில்லை.
- ஞானஸ்நானம் பெற்றதால் வயலெட்டா இன்று மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார். காத்திருக்கவேண்டிய அவசியமில்லை என்பது அவரது கருத்து. ஞானஸ்நானம் பெறுவதற்கு வேதாகமம் முழுவதையும் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இருக்கவில்லை.




அவர் தன் வாழ்க்கையை முற்றிலுமாக இயேசுவிடம் ஒப்படைத்து, தன் முழு இருதயத்தோடும் அவரை நம்பவேண்டியது மட்டுமே அவசியமாக இருந்தது. இரட்சிக்கப்படுவதற்கு தான் என்ன செய்ய வேண்டுமென்று சிறைச் சாலைக்காரன் பவுல் மற்றும் சீலாவிடம் கேட்டபோது, 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொன்னார்கள். அப்போஸ்தலர் 16:31.



**தன்னுடைய தீர்மானத்தைப் பயன்படுத்தி 60 வயது முதியவர் ஒருவர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு தேவன் உதவியதை எண்ணி வயலெட்டா மிகவும் மகிழ்ச்சியடைகிறார்.**

அவரது அந்தத் தீர்மானத்தின் செல்வாக்கு வளர்ந்து கொண்டே இருந்தது. இப்போது 9 வயதான அவரது மகனும் ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறார். “அவன் சரியான பாதையில் வளருவதற்கு விரும்புகிறேன்” என்று சொன்னார்.